சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–26.09.2022.

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12–ஆம் நாள் (வியாழக்கிழமை, நாள்:–29.09.2022) வியாழக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

| | | |
|---|---|---|
| **பொருள் எண்.1**<br>சின்னமனூர் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட்/2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் அனுமதிக்கலாம்** | |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **196**, நாள் **23.09.2022** | |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. | |
| ******* | | |
| **பொருள் எண்.2**<br>சின்னமனூர் நகராட்சி, பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட்/2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம்** | |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **197**, நாள் **23.09.2022** | |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. | |
| ******* | | |
| **பொருள் எண்.3**<br>சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **25.07.2022**ம் தேதிய ந.க.**20860**/2022/SBM எண்ணிட்ட கடிதத்தில், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) 2022-23-இன்கீழ் தொகை ரூ.**46.00** இலட்சம் மதிப்பீட்டில் 4 TPD கொள்ளளவு கொண்ட மின்னகரில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு **24.08.2022** அன்று Online மூலம் வரப்பெற்ற தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டதை தொடர்ந்து **29.08.2022**ம் அன்று விலை மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**1.**திரு.R.பரமானந்தன்,பரமத்தேவன்பட்டி–**4.93**சதவிகிதம்,மதிப்பீடுவிலை விகிதத்திற்கு கூடுதல்<br>**2.**திரு.K.வனராஜ், சின்னமனூர் – **4.98** சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல் | | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **1** | **தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) 2022–23இன் கீழ் மேற்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1, திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரது விலைப்புள்ளி 4.93% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு குறைவாக (Negotiation Letter) வழங்கக்கோரி 29.08.2022–இல் கடிதம் அனுப்பியமைக்கு, திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். மேலும், 2000–ஆம் வருடத்திய உள்ளாட்சி அமைப்பிற்கான பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.** |

| | | |
|---|---|---|
| | 2 | அவசரஅவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.7942/2022/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 198, நாள் 23.09.2022 | |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. | |

*******

**பொருள் எண்.4**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 18.07.2022ம் தேதிய ந.க.9512/2022/SBM-1 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, இந்நகராட்சிக்கு 2022–2023ம் ஆண்டிற்கான தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) கீழ் ரூ.110.00 இலட்சம் (ரூபாய் நூற்று பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குச் சொந்தமாக வார்டு எண்.27, அய்யனார்புரம், வண்ணான்கரட்டில் அமைந்துள்ள உரக்கிடங்கில் உள்ள பழைய தேக்க திடக்கழிவுகளை பயோ மைனிங் முறையில் அகற்றும் பணி மேற்கொள்ள 22.08.2022ம் தேதியன்று கீழ்க்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1 | M/s. Paperman Environmental Solutions Pvt Ltd., Chennai | 24.08.2022–ஆம் தேதிய கடிதத்தில் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளியினை திரும்ப பெறுவதாக கடிதம் சமர்ப்பித்துள்ளார். |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார். |
| 3 | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | தொழில்நுட்ப தகுதி பெறப்படவில்லை. |

மேற்காணும் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் M/s. Paperman Environmental Solutions Pvt Ltd., Chennai என்பவர் ஒப்பந்தப்புள்ளியினை திரும்ப பெறுவதினாலும் வரிசை எண்.3–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் தொழில்நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கலாம். மேலும், அதனைத் தொடர்ந்து வரிசை எண்.2–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன் பரமத்தேவன்பட்டி அவர்களின் விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளியினை 29.08.2022ம் தேதியன்று திறக்கப்பட்டதில் மேற்படி ஒப்பந்தக்காரர் அளித்துள்ள விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரு.1,14,11,688/– (மதிப்புள்ள விலை விகிதத்தினை விட 4.81% கூடுதல்) மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.திரு.ஆர்.பரமானந்தன் பரமத்தேவன்பட்டி என்பவரது விலை விகிதம் 4.81 சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு குறைவாக (Negotiation Letter) வழங்கக்கோரி 29.08.2022ம் தேதியன்று கடிதம் அனுப்பியமைக்கு திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்தக்காரர் மூலதன பொருட்கள் விலை |

| | |
|---|---|
| | உயர்வு மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, 2000–ஆம் வருடத்திய உள்ளாட்சி அமைப்பிற்கான பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chaper-II) விதி எண்.2.7.2–இன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 199, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சியில் பணிபுரியும் தகுதியான பணியாளர்களுக்கு வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வருடாந்திரம் வழங்கப்பட வேண்டிய 2022–2023 ஆம் ஆண்டிற்கான இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையல்கூலி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–ற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.2664/2022/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 200, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான TN 60 Z 2921 டிராக்டர் கொள்முதல் செய்து 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தற்போது 2022–2023ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி (Renewal) மேற்கொள்ளுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர், உத்தமபாளையம் அவர்களிடம் உரிய கேட்பு பெறப்பட்டதில் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் பசுமை வரி ரூ.12760/–ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.<br>3.பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி செலவினம் ரூ.12,760/– செலவிடப்பட்டுள்ளது. எனவே, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.8491/2022/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 201, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**

பொதுசுகாதாரம் – ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடியக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள் உபயோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தமிழக அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28459/2021/எச்1 நாள்.02.03.2022 மற்றும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.TNPCB/THENI/F-MISC-23/STF/2022, நாள்.04.03.2022–ன்படியும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி அலுவலர்கள் மூலமாக தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய வணிக நிறுவனங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கும் பொருட்டு பிளாஸ்டிக் கழிவின் விளைவுகள் குறித்தும், கொரோனா நோய் தொற்று பரவுதலை தடுக்கவும் முகக்கவசம் அணிந்து பொது மக்கள் கடைபிடிக்க வேண்டிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தேவையான நோட்டீஸ்கள் அச்சிட்டு பெற நகர்மன்றத்தீர்மானம் எண்.143 நாள்.29.07.2022 மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.177 நாள்.29.08.2022இன்படி முறையே ரூ.1.00 மற்றும் 1.20 ஆக மொத்தம் ரூ.2.20இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் நிர்வாக அனுமதியில் GST நீங்கலாக தொகைக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சக லிமிடெட், தூத்துக்குடி என்ற நிறுவனத்தின் பட்டியலின்படி GST ரூ.21,500 ( இருபத்து ஓராயிரத்து ஐந்நூறு மட்டும்) சேர்த்து வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட கூடுதலாக வரும் GST தொகையினை சேர்த்து நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.8745/2022/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 202, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில், திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு தூய்மைப்பணியாளர்கள் மூலம் 1 முதல் 27 வார்களிலும் வீடுவீடாக சென்று மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. மேலும் தெருக்கள், கடைவீதிகள் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்கண்ட பணிகளில் பயன்படுத்தப்படும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்காணும் பொருட்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,20,000/–ற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தளவாட பொருட்கள்

| வ.எண் | பொருட்கள் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | சாக்கடை மண் தள்ளும் கரண்டி | 100 Nos |
| 2. | முள் தொழுகம்பி | 45 Nos |
| 3. | மண்வெட்டி | 45 Nos |
| 4. | சவல் | 10 Nos |
| 5. | கடப்பாறை (6 ply) | 15 Nos |
| 6. | சம்மட்டி | 3 Nos |
| 7. | மண் தள்ளும் பிரஷ் | 100 Nos |
| 8. | வெட்டு அரிவாள் | 15 Nos |
| 9. | பிளாஸ்டிக் டிரம் மூடியுடன் (200 Lit Capacity) | 10 Nos |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம் (8745/2022/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 203, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தைக்கு எதிர்புறம் Wet Mix Macadam சாலை அமைக்கும் பணிக்கு தொகை ரூ.4,70,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்,194, நாள்.29.08.2022–இன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.08% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு

2.திரு.கே.வனராஜ், கூடலூார்– 0.24% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1– இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.8385/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 204, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் Wet Mix Macadam சாலை அமைக்கும் பணிக்கு தொகை ரூ.7,20,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்,193, நாள்.29.08.2022–இன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.08% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு

2.திரு.கே.வனராஜ், கூடலூர் – 0.24% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.8386/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 205, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கலெக்சன் கிணற்றிற்கு 15 எச்.பி.மோட்டார் ஒரு எண்ணம் வாஙகும் பணிக்கு தொகை ரூ.6,50,000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்,168, நாள்.29.08.2022–இன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.23% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு

2.திரு.கே.வனராஜ், கூடலூர் – 0.14% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.8118/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 206, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, காந்தி நகர் காலனி பகுதியில் புதியதாக ஆழ்துறை கிணறு மூலம் மின் மோட்டாருடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணிக்கு தொகை ரூ.2,80,000/–ம் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்,187, நாள்.29.08.2022–இன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி – 0.08% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு<br>2.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.14% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திருமதி.எஸ்.சுப்புலட்சுமி, சீலையம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.8362/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 207, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.13**

இந்நகராட்சிகுச் சொந்தமான பொது சுாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர் பிளேசர் வாகனம் வண்டி எண்.TN60W1755-ஐ டிப்பர் வாகனமாக மாற்றியமைக்கும் பணிக்கு தொகை ரூ.7,50,000/–ம் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.189, நாள்.29.08.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s Sri Murugan Auto Electricals, Cumbum – மதிப்பீட்டு விலைவிகிதம்
2. M/s.Sri Sai Ram, Cumbum / 1.39% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் M/s Sri Murugan Auto Electricals, Cumbum என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.8360/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 208, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர் பிளேசர் வாகனம் வண்டி எண்.TN60T4228-ஐ டிப்பர் வாகனமாக மாற்றியமைக்கும் பணிக்கு தொகை ரூ.7,30,000/–ம் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.188, நாள்.29.08.2022–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.M/s Sri Murugan Auto Electricals, Cumbum – மதிப்பீட்டு விலைவிகிதம்
2.M/s.Sri Sai Ram, Cumbum / 0.53% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் M/s Sri Murugan Auto Electricals, Cumbum என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.8361/2022/இ1)** |

| நகர்மன்ற தீர்மான எண்: | 209, நாள் 23.09.2022 |
|---|---|
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பொது சுகாதார பணியான டெங்கு தடுப்பு பணிகள், மலேரியா, கொரோனா தடுப்பு பணிகள், கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு, தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் போன்ற பணிகள், மேலும் பொது சுகாதாரம் தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்தமைக்கும் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.48, நாள்.20.05.2022ன்படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 21.07.2022 மற்றும் 22.07.2022 ஆகிய தேதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் பொருட்டு விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நிகழ்ச்சி 1க்கு ரூ. |
|---|---|---|
| 1 | கரிசல் கலைக்குழு, எருமலைநாயக்கன்பட்டி | ரூ.7000/– |
| 2 | வைகை கலைக்குழு, கம்பம் | ரூ.9500/– |

| **அலுவலகக் குறிப்பு:–** | 1.குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.1ல் காணும் கரிசல் கலைக்குழு, எருமலைநாயக்கன்பட்டி என்ற கலைக்குழுவின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2.பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.1663/2022/எச்1) |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 210, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.16**

அனைத்து அரசு துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறைகளில் ஒப்பந்தப்பதிவு, மேற்படி பதிவிற்கான பண மதிப்பு (Monetary Ceiling Limit) குறித்த விவரங்கள் பொதுப் பணித் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி ஒப்பந்தக்காரர்களுக்கு வகுப்பு வாரியாக ஒப்பந்தப்பணிகள் வழங்க வேண்டிய மதிப்பு (Monetary Limit) மற்றும் சொத்து மதிப்பு குறித்து திருத்திய உத்திரவு நிர்ணயம் செய்து வரப்பெற்ற பொதுப்பணித்துறையின் 17.06.2022ம் நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.37 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வகுப்பு | ஏற்கனவே அரசாணை(M3) எண்.222 PWDன்படி நாள்.08.04.1999ன்படி பண மதிப்பு அளவு | ஏற்கனவே உள்ள பணமதிப்பு அரசாணை (MS) எண்.195, PWD, Dt.14.12.2021 | தற்போது உத்தேசிக்கப்பட்டது | |
|---|---|---|---|---|---|
| | | | | பணமதிப்பு அளவு | சொத்து மதிப்பு தொகை |
| 1. | வகுப்பு–1A | – | – | 25 கோடிக்கு மேல் | ரூ.2.50 கோடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | வகுப்பு–1 | ரூ.75 இலட்சத்திற்கு மேல் | 10 கோடிக்கு மேல் | 10 கோடி மேல் 25 கோடி வரை | ரூ.1.50 கோடி |
| 3. | வகுப்பு–II | ரூ.75 இலட்சம் வரை | 5 கோடியிலிருந்து 10 கோடி வரை | 5 கோடிக்கு மேல் 10 கோடி வரை | ரூ.75.00 இலட்சம் |
| 4. | வகுப்பு–III | ரூ.30 இலட்சம் வரை | 2 கோடியிலிருந்து 5 கோடி வரை | 2 கோடிக்கு மேல் 5 கோடி வரை | ரூ.30.00 இலட்சம் |
| 5. | வகுப்பு–IV | ரூ.15 இலட்சம் வரை | 50 இலட்சம் முதல் 2 கோடி வரை | 50 இலட்சத்திற்கு மேல் 2 கோடி வரை | ரூ.10.00 இலட்சம் வகுப்பு IV ஒப்பந்தக்காரருக்கு சொத்து மதிப்பு சான்று ரூ.7.50 இலட்சத்திற்கு பதிலாக ரூ.10.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| 6. | வகுப்பு–V | ரூ.6 இலட்சம் வரை | 50 இலட்சம் வரை | 50 இலட்சம் வரை | பதிவு செய்யப்படும் மதிப்பில் 15 சதவீதம் வகுப்பு V ஒப்பந்தக்காரருக்கு ரூ.20 இலட்சத்திற்கு சொத்து மதிப்புச் சான்று வழங்கினால் அதன் 15 சதவிகிதம் மதிப்பான ரூ.3.00 இலட்சம் மதிப்பு கணக்கிட வேண்டும். |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மன்றம் பதிவு செய்யலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 211, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

## பொருள் எண்.17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, காந்தி நகர் காலனி அரசு மாணவியர் விடுதியின் அருகில் ஒரு சிறுபாலம் மற்றும் வார்டு எண்.25, பழையபாளையம் ரோடு மற்றும் பத்மநாபசாமி கோவில் தெரு ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 212, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.18

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, கஸ்பா ரோடு குறுக்குத் தெரு மற்றும் வார்டு எண்.19, சிவசக்தி நகர் மெயின்ரோட்டின் குறுக்கே மழைநீர் வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் முழுவதும் சாலையில் தேங்கி, நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது. எனவே, பொது

சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7,10,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 213, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, விஸ்வன்குளம் அருகில் அமைந்துள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள மாணவியர் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பள்ளி வளாகத்தில் தேங்கி கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே, பொது சுகாதாரம் கல்வி பயிலும் குழந்தைகளின் நலன் கருதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதியிலிருந்து மேயர்ராம் பள்ளி வரை பாதாள சாக்கடை திட்ட தொட்டி மற்றும் பாதாள சாக்கடை திட்ட குழாய் பதிக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,30,000/— (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம் (ந.க.எண்.8054/2022/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 214, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு, திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு வாகனம் TN 60 G 0742 Grape Master டிராக்டர் வாகனத்திற்கு புதிதாக டிரைலர் வாங்க மேற்கொள்ளவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.159 நாள்.29.08.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து 14.09.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை (1 எண்ணம்) |
|---|---|---|
| 1. | RARA LABOUR FARM EQUIPEMENTS, CHINNAMANUR என்ற நிறுவனம் | 2.20 இலட்சம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2. | COVAI COACH BUILDERS, CHINNAMANUR என்ற நிறுவனம் | 2.26 இலட்சம் | |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள RARA LABOUR FARM EQUIPEMENTS, CHINNAMANUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **215**, நாள் **23.09.2022** |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.21**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24–B, 24-H-இன்படி அந்தந்த நகராட்சிகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபை ஏற்படுத்துவதற்கும், அதன் செயல்பாடுகள் குறித்தும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபை) விதிகள் 2022 உருவாக்கப்பட்டு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள்.24.06.2022–இல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபை (Area Sabha) குழு நிர்ணயம் செய்திடவும், குழு குறித்த செயல்பாடுகள் தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மற்றும் அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.மன்றம் பதிவு செய்யலாம்.<br>2.அரசாணை வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **216**, நாள் **23.09.2022** |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி GIS மற்றும் Town Mapping செய்யும் பணி கீழ்க்கண்ட விவரப்படி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சாலைகளின் நீளம் அகலம் மற்றும் சாலைகளின் பெயர் வார்டு வாரியாக தயார் செய்து மேற்படி சாலைகளுக்கு எண் வழங்கும் பணி (Unicode) மேற்கொள்ளுதல்.
2. மேற்படி சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களின் நீளம் மற்றும் அகலம் குறிப்பிடுதல்.
3. அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறுபாலங்களின் விவரம் குறிப்பிடுதல்

4. புதிதாக மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளில் எல்கைக்கோடு குறிப்பிடப்பட்டு (Ward Boundary) வரைபடம் தயார் செய்யுதல்
5. புதிதாக மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகள் அடங்கிய டவுன் மேப் தயார் செய்தல் (Town Map).
6. நகர்ப்பகுதியில் குடிநீர் விநியோகம் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள விவரம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் விவரங்களுடன் கூடிய வரைபடம் தயார் செய்தல்
7. பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்ட பிரதானக் குழாய்கள் மற்றும் புதை சாக்கடைத் திறப்பு (Manhole) க்கள் அமைக்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளுதல்.
8. நடைபெற்று முடிந்த உள்ளாட்சித் தேர்தலுக்கு மேற்கொள்ளப்பட்ட வார்டு மறுவரையறைக்கு ஏற்றவாறு சாலைகள், ஒவ்வொரு வார்டிலும் உள்ள சாலைகள், மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் அவற்றின் நீள அகலம், மேற்படி வார்டுகளுக்கான எல்கைக்கோடு, குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் பிரதானக் குழாய்கள் அமைந்துள்ள இடம், Manhole அமைந்துள்ள இடங்கள், மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்த வரைபடங்கள் தயார் செய்தல் ஆகிய மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.87000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.8790/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 217, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.23**

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு, பணியாளர்களின் செலவினை மொத்த வருவாயில் 49 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்தும் நோக்கில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தெருவிளக்குகளை இயக்குதலும் பேணுதலும் பணியில் காலியாக உள்ள மின் கம்பியர் (Wireman) மற்றும் மின் பணி உதவியாளர் (Electrical Helper) பணியிடங்களை பூர்த்தி செய்வதை நிறுத்தி வைத்து, மேற்படி பணிக்கு மூன்றாண்டு காலத்திற்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ஐ

| | |
|---|---|
| பின்பற்றி, ஒப்பந்த அடிப்படையில் (Contract of Basis) பொதுப்பணித் துறை (அ) தமிழ்நாடு குடிநீர் (மற்றும்) வடிகால் வாரியம் (அ) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள விலை விகிதத்திற்கு (Schedule of Rates) பின்பற்றி மதிப்பீடுகள் தயார் செய்து தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் என ஆணையிட்டு வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ.3) துறையின் 17.08.2022ம் நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.111 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.8737/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 218, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |

| | |
|---|---|
| **பொருள் எண்.24**<br><br>உள்ளாட்சி அமைப்புகளில் அதாவது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் விநியோகப் பணிக்கென அரசாணை எண்.198, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.10.1998–இல் ஒவ்வொரு நகராட்சிக்கும் அதன் தரத்திற்கேற்ப அளவுகோல் நிர்ணயம் செய்து குடிநீர் விநியோகம் பணிக்கான இயக்குதலும் பேணுதலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அநேக நகராட்சிகளில் குடிநீர்ப் பிரிவில் பல பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, பணியாளர்களின் செலவினை 49 சதவிகிதத்திற்குள் மேற்கொள்ள வேண்டுமென அரசு உத்திரவு பிறப்பித்துள்ளதால், குடிநீர்ப் பிரிவின் இயக்குதலும் பேணுதலும் பணியினை வெளியாட்கள் மூலம் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) பொதுப் பணித்துறை (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (அ) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் அட்டவணை விலை விகிதத்தின் (Schedule of Rates) மதிப்பீடுகள் தயார் செய்து தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதி 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ள உத்திரவு பிறப்பித்து வரலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (எம்.இ.3) வழங்கல் துறையின் 17.08.2022ம் நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.112 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.8761/2022/இ2** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 219, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.25**

சின்னமனூர் நகராட்சி 1984ம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். 2021ம் ஆண்டிற்கான உத்தேச மக்கள் தொகை 46305 ஆகும். நகரின் மொத்த பரப்பளவு 25.76 சதுர கிலோ மீட்டராகும். நகர்ப்பகுதி 27 வார்டுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் தற்பொழுது மூன்று வாகனங்கள் உள்ளன. ஒரு வாகனம் நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கும், ஒரு வாகனம் ஆணையாளர் அவர்களின் புறப்பணி ஆய்விற்கும், ஒரு வாகனம் நகராட்சிப் பொறியாளர் அவர்களின் புறப்பணி ஆய்விற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒரு வாகனம் (மார்சல்) 2000–ஆம் ஆண்டு வாங்கப்பட்ட வாகனம் ஆகும். மேற்படி வாகனம் வாங்கப்பட்டு 22 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் நீண்ட தொலைவில் பயணம் செய்ய இயலவில்லை. நகர்மன்றத் தலைவர் அவர்கள் அலுவல் நிமித்தம் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இதர அரசு அலுவலகங்கள், நகரில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் மற்றும் சுகாதார பணி ஆய்வு மேற்கொள்ள செல்லவும், புதியதாக ஸ்கார்பியோ வாகனம் வாங்குவதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தினை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**<br>**3. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.8789/2022/இ1).** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 220, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு, கிருமிநாசினியாக உபயோகப்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பீளிச்சிங்பவுடர் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.160 நாள்.29.08.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து முதல் தவணையாக கீழ்காணும் விவரப்படி கிருமிநாசினிகளை விநியோகம் செய்யும் பணிக்கு 22.09.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **நிறுவனம்** | **நீர்த்தசுண்ணாம்புத் தூள் ( விலை ரூ ஒரு கிலோவிற்கு)** | **பீளிச்சிங் பவுடர் (விலை ரூ ஒரு கிலோவிற்கு)** |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | VARUNA ENTERPRISES CHINNAMANUR என்ற நிறுவனம் | 8.75 | 39 |
| 2. | BALAJEE TRADERS, THENI என்ற நிறுவனம் | 10 | 40 |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் காணும் நிறுவனமான VARUNA ENTERPRISES CHINNAMANUR குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 221, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.27**

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் தற்பொழுது 45 உள்ளாட்சி நிறுவனங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் பல நகராட்சிகளில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு பணியாளர்கள் செலவினை மொத்த வருவாயில் 49% சதவிகிதத்திற்குள் ஓரளவு கட்டுப்படுத்தவும், புதிய பணியிடங்களை தோற்றுவித்தால் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை மேலும் பலவீனமாவதை கவனத்தில் கொண்டு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் சமர்ப்பித்த கருத்துருவினை ஏற்று பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறையில் உள்ள நகராட்சிகளில் பொதுப்பணித் துறை (அ) தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் (அ) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள அட்டவணை விலை விகிதத்திற்கு (Schedule of Rates) மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) மூன்றாண்டு காலத்திற்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ஐ பின்பற்றி இயக்குதல் மற்றும் பேணுதல் பணிகளை (Operation and Maintenance) மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை உள்ளாட்சிகளின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம் என உத்திரவிட்டு வரலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ3) துறையின் 17.08.2022ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) எண்.113 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.8736/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 222, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.28**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **25.07.2022**ம் தேதிய ந.க.**20860/2022**/SBM எண்ணிட்ட கடிதத்தில், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) 2022-23–இன் கீழ் தொகை ரூ.**46.00** (GOI Share 50%-Rs.23.00 Lakhs, GoTN Share 33% -Rs.15.18 Lakhs and ULB Contribution 17%- Rs.7.82 Lakhs) இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு 4 TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து வார்டு எண்.**19**–இல் மின்னகர் பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.**46.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.**2126/2022**/பி2, நாள்.**04.08.2022**–இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேலும் மண்டல செயற் பொறியாளர், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.**2126/2022**/பி2, நாள்.**04.08.2022**–இன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு **24.08.2022**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.ஆர்.பரமானந்தன, பரமத்தேவன்பட்டி என்பவரின் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளி மன்ற அனுமதி பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டு **01.09.2022**ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியினை வார்டு எண்.**19**– மின்னகரில் மேற்கொள்ள போதிய வசதி இல்லாத காரணத்தினால் அவ்விடத்திற்கு பதிலாக இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட விஸ்வன்குளம் அருகில் நுண்ணுயிர் உரமையம் கட்டுவதற்கு போதுமான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள மாற்று இடத்தில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள அதே மதிப்பீட்டு அளவுகளின்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 223, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.29**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டம் (பாதாள சாக்கடை திட்டம்) நடை முறைப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பணிபுரிய பணியாளர்கள் ஏதும் நியமிக்கப்படவில்லை. இந்நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவதற்கும், நகரில் உள்ள அனைத்து Manhole ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்கும்,

| | |
|---|---|
| நகரில் ஏற்படும் கசிவுகளை சரி செய்வதற்கும் மற்றும் Desilting Vehicle வாகனத்தினை இயக்குவதற்கும் போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது ஒப்பந்த காலம் ஆகஸ்ட் 2022 உடன் முடிவடைய உள்ளதால் செப்டம்பர் 2022 முதல் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.**<br>**3.நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமை மன்றம் ஏற்கலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 224, நாள் 23.09.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்,
நகர்மன்றத்தலைவர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
சின்னமனூர் நகராட்சி